# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS.43 of 2017 | **PW - 1** | : | Cross continuation |
| **Name** | வெங்காடசலம் | **Father Name** | : | கிருஷ்ணன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 15.10.2025 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 12.20 PM

**2** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

நானும் 1 ஆம் வாதி மாயக்கண்ணனும் உடன் பிறந்த சகோதரர்கள் என்று சொன்னால் சரிதான். எங்கள் இருவருக்கும் இடையில் இதனால் வரை பாகம் ஏற்படவில்லை குடும்ப சொத்தை ஒன்றாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல பாகம் ஏற்பட்டுவிட்டது. அவ்வாறு பாகம் ஏற்பட்டதற்காக பாகப்பிரிவினை பத்திரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. பாகம் ஏற்படவில்லை என்பதால்தான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் சொத்தைப் பொறுத்து பாகம் ஏற்பட்டுவிட்டது. 1 ஆம் பிரதிவாதி கோவிந்தன் குடும்ப சொத்தை பொருத்து பாகம் ஏற்படவில்லை என்று சொன்னால் நாங்கள் 6 சென்ட் வாங்கும் வரை ஏற்படவில்லை அதன் பின்னிட்டு ஏற்பட்டிருக்கும். அதன் பின்னிட்டு அவர்கள் குடும்பத்தில் பாகம் ஏற்பட்டதற்காக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2 ஆம் பிரதிவாதி சரஸ்வதி பாகப்பிரிவினை கோரி மாண்பமை சார்பு நீதிமன்றம் ஊத்தங்கரையில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 196/ 2017 என்ற வழக்கு இதுநாள்வரை நிலுவையில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் சிட்டா தான் ரமேஷ் என்பவரிடமிருந்து 1 ஆம் வாதி பி.வா.சா.ஆ 1 இன் படி வாங்கிய நிலத்திற்கான சிட்டா என்றால் அது இல்லை. அதன் சிட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அறிக்கை குறித்து வழக்கறிஞர் தெரிவித்தாரா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.ச.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நில அளவையர் தாக்கல் செய்த புலவரைபடம் நீ.ம.ச.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது நீதிமன்ற ஆணையர்

மாதிரி வரைபடம் நீ.ம.ச.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த புகைப்படங்கள் நீ.ம.ச.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.ச.ஆ 4 இல் உள்ள புகைப்படங்கள் தாவா சொத்திற்கான புகைப்படம் என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா சொத்தில் வண்டி வழி எதுவும் இல்லை அது விவசாய நிலமாகதான் மரங்கள் நடப்பட்டு உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல நாங்கள் வழியாகதான் பயன்படுத்தி வருகிறோம். எந்த சர்வே எண்ணிற்கு அதை வழியாக பயன்படுத்துகிறோம் என்றால் சர்வே எண் 27-க்கு பயன்படுத்தி வருகிறோம் உட்பிரிவு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது தவறு பி.வா.சா.ஆ 1 இன் படி எனது தம்பி கிரையம் பெற்ற நிலத்தின் வழியாக தான் நாங்கள் காலம் காலமாக சென்று வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் எப்பொழுதும் வழியாக பயன்படுத்தி வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாவாவில் தாக்கல் செய்துள்ள நிலம் உட்பட மற்ற நிலங்கள் 1,2 பிரதிவாதிகளுக்கும் கோவிந்தனின் மக்களுக்கும் பாத்தியப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்று சொன்னால் சரியல்ல நான் வாங்கிய போது கோவிந்தன் பெயரில் தான் ஆவணங்கள் இருந்தது. அது பிதுராஜ்ஜித சொத்து என்பதால் தான் என்னுடைய கிரைய பத்திரத்திலும் பிதுராஜ்ஜித சொத்து என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது கோவிந்தன் பெயரில் எந்த வில்லங்கமும் இல்லாமல் இருந்ததால் நான் விலைக்கு பெற்றேன். வா.சா.ஆ.1 கிரையபத்திரத்திற்கான தகவலையும் அதற்குண்டான செலவுகளையும் நான் தான் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே அது பூர்வீக சொத்து என்று எனக்கு தெரியும் நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் அது பூர்வீக சொத்து என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திலும் இதர சொத்துக்களிலும் 2 ஆம் பிரதிவாதிக்கும் 1 ஆம் பிரதிவாதியின் மக்களுக்கும் பிறப்பின் அடிப்படையிலேயே பங்குரிமை உள்ளது என்று சொன்னால் எனக்கு விற்பனை செய்த 6 சென்ட் நிலம் போக மீத சொத்துக்களில் அவர்கள் பாகத்தை எடுத்துக்கொள்ளட்டும். 2 ஆம் பிரதிவாதியும் 1 ஆம் பிரதிவாதியின் வாரிசுகளும்தான் இதனால் வரை தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. கிரையம் வாங்கும் நான் தான் சொத்தை பார்த்து வாங்க வேண்டும் என்று சொன்னால் கோவிந்தன் நான் 6 சென்ட் தான் விற்பனை செய்கிறேன் மீத நிலங்கள் உள்ளது என்று கூறியதன் அடிப்படையில் நான் விலைக்கு வாங்கினேன். கூட்டு குடும்ப சொத்து என்பதால் நான் வா.சா.ஆ 1

இன் படி தாவா சொத்தை கிரயம் வாங்கியது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கு செக்குப்பந்த்திகள் குறிப்பிட்டு சொத்தை விற்பனை செய்ய உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி மற்றும் இதர பாகதாரர்கள் பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்று தான் நானும் கோவிந்தனும் இவ்வாறு மோசடியான ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் அந்த ஆவணம் இதுநாள்வரை அமலுக்கு வரவில்லை அதன்படி நாங்கள் வழி எதுவும் உருவாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் 2 ஆம் பிரதிவாதிக்கு நஷ்ட ஈடு செலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல . தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**முடிவு நேரம் – 12.50 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.